DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 125/2024 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : அமுதா (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : சுப்பன் |
| Village | : சிலுவத்தூர் |
| Taluk | : சாணார்பட்டி |
| District | : திண்டுக்கல் |
| Age | : 50/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of October 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து பூ வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சின்னப்பொட்டு என் அம்மா ஆவார். ஆஜர் எதிரியை நான் பார்த்திருக்கிறேன். கடந்த வருடம் ஆடி மாதம் ஒரு நாள் இரவு சுமார் 7.00 மணியளவில் என் அம்மா எங்கள் வீட்டின் அருகே கடைக்கு சென்றுவிட்டு சாலையை கடந்தபோது வடக்கேயிருந்து வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எங்கள் வீட்டில் இருந்த என் பிள்ளைகள் சத்தம் கேட்டு பார்த்ததாக எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். அதன்பேரில் நான் மதுரை அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது என் அம்மா இறந்துவிட்டார். என் அம்மாவிற்கு வலது கால் உடைந்துவிட்டது. தலையில் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டு தலையில் எலும்பு வெளியே தெரிந்தது. பின்னர் நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். மேற்படி விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் சமுத்திராபட்டியை சேர்ந்த ஆஜர் எதிரியாவார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை மனு எழுதுபவர் மூலம் எழுதச்சொல்லி நான்

கையொப்பம் செய்து காவல் நிலையத்தில் கொடுத்தேன். அந்த புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

2) எழுதிய பேப்பரில் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். புகாரை யார் எழுதியது என்று தெரியுமா என்றால் எனது மகள் என்னிடம் கையொப்பம் போட சொன்னார், அம்மா இறந்த பதற்றத்தில் இருந்ததால் யார் எழுதினார் என்று தற்போது ஞாபகம் இல்லை. நான் திண்டுக்கல் மாவட்டம் சிலுவத்தூர் தாலுகாவில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடத்திலிருந்து சமுத்திராப்பட்டி சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். விபத்து குறித்த விபரத்தை எனது மகள் கோகிலா சொன்னார். எங்கு வரச்சொல்லி எனது மகள் சொன்னார் என்றால் நத்தம் மருத்துவமனைக்கு வர சொல்லிவிட்டு பின்னர் மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னதால் அங்கு சென்றேன்.

3) சாட்சி நாகலட்சுமி எனது மகள் என்றால் சரிதான். அவர் வடமதுரையில் உள்ள கம்பிளியம்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான் சம்பவத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பில் இருந்து அம்மாச்சியை பார்ப்பதற்காக சம்பவ ஊரான சமுத்திராபட்டிக்கு வந்திருந்தார். எந்த தேதியில் சமுத்திராப்பட்டிக்கு வந்திருந்தார் என்றால் 3ம் தேதியே வந்துவிட்டார், விபத்து 6ம் தேதி நடந்தது. சாட்சி கோகிலா என்பவர் எனது மகள் என்றால் சரிதான். கோகிலா எங்கு வசித்து வருகிறார் என்றால் சிலுவத்தூரில் என்னுடன் வசிக்கிறார். சாட்சி ராதிகா என்பவர் எனது மகள் பாண்டீஸ்வரி மகள் என்றாலும், எனக்கு பேத்தி என்றாலும் சரிதான். பாண்டீஸ்வரி என்பவரும் வேறு ஊரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

4) எதிரியை போலீஸார்தான் அடையாளம் காட்டினார்களா என்றால் இல்லை, எனது மகள் நாகலட்சுமி, கோகிலா மற்றும் பேத்தி ராதிகா ஆகியோர் சொன்னார்கள். இந்த விபரத்தை புகார் மனு மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் கேட்காததால் சொல்லவில்லை. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் விபத்து நடைபெறவில்லை என்றாலும் இறந்து போன எனது அம்மாவிற்கு காப்பீடு பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை எப்பொழுது விசாரித்தார் என்றால் 10ம் தேதி விசாரித்தார் அதற்கு பிறகும் விசாரித்தார்கள். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.27 14:27:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.125/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 125/2024 LW- 3 PW- 2

| | |
|---|---|
| Name | : கோகிலா (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சுப்பன் |
| Village | : சிலுவத்தூர் |
| Taluk | : சாணார்பட்டி |
| District | : திண்டுக்கல் |
| Age | : 18/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of October 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

கேள்வி: சம்பவ சமயம் எனக்கு எத்தனை வயது என்றால்?

பதில்: 17 வயது.

கேள்வி : நான் தற்போது எங்கு வந்துள்ளேன் என்று தெரியுமா என்றால் ?

பதில்: தெரியும், நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன்.

கேள்வி: சத்தியமாக சொல்வது என்றால் என்ன?

பதில்: நடந்த உண்மையை சொல்வது.

சாட்சி கேள்விகளை புரிந்து கொண்டு பதில் சொல்வதால், அவரது சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கோயம்புத்தூரிலுள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் அம்மா. வழக்கில் இறந்துபோன சின்னப்பொட்டு என் அம்மாச்சியாவார். ஆஜர் எதிரி சமுத்திராப்பட்டியை சேர்ந்தவர் அவரை நான் பார்த்திருக்கிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் மாலை 7.00 மணிக்கு மேல் எங்கள் வீட்டின்

முன்பாக நான், என் அக்கா நாகலெட்சுமி மற்றும் என் அக்கா மகள் ராதிகா ஆகியோர் நின்று கொண்டிருந்தபோது, எங்கள் வீட்டின் முன்பாக உள்ள சாலையின் எதிர்திசையிலுள்ள கடைக்கு என் அம்மாச்சி சென்றுவிட்டு திரும்பி வரும்போது கார் ஒன்று வந்துகொண்டிருந்தது. காரின் எதிர்திசையில் இருசக்கர வாகனம் அதிக வேகமாக வந்து என் அம்மாச்சியின் மீது மோதியதில் என் அம்மாச்சியின் சத்தம் கேட்டு நாங்கள் சென்று பார்த்தோம். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் குடிபோதையில் இருந்தார். என் அம்மாச்சிக்கு கால் மற்றும் நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. என் அம்மாச்சி உயிருக்கு போராடிக்கொண்டிருந்தார். அவரை அவசர ஊர்தியில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு என் அம்மாச்சி மறுநாள் காலை 10.00 மணிக்கு மேல் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். சம்பவ நேரத்தில் கூட்டமாக இருந்ததாலும், நாங்கள் பதற்றமாக இருந்ததாலும் எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை சரியாக கவனிக்கவில்லை. போலீசார் விசாரித்தபோது நான் வீட்டில் இல்லாததால் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எனது தாயாரான அ.சா.1 உடன் சிலுவத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சம்பவ தேதியிலிருந்து மூன்று மாதத்திற்கு முன்பு வரை எனது அம்மாச்சியுடன் தான் இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்ததாக வாக்குமூலம் பதிவு செய்திருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது அம்மாச்சி எங்கள் வீட்டிற்கு எதிர்ப்புறம் உள்ள இடது பக்க கடைக்கு சென்றிருந்தார் எனக்கு திசைகள் பற்றி தெரியாது. எனது அம்மாச்சி எந்த திசையில் இருந்து வந்தபோது விபத்து ஏற்பட்டது என்றால் சமுத்திராப்பட்டி பாலம் அருகே வலது பக்கம் விபத்து நடந்தது.

3) எனது அம்மாச்சி சென்ற கடையானது வீட்டில் இருந்து 4 நிமிடம் செல்லும் தூரத்தில் உள்ளது. எனது அம்மாச்சி எத்தனை மணிக்கு கடைக்கு சென்றார் என்றால் நேரம் சரியாக ஞாபகம் இல்லை. அந்த சமயம் நான் வீட்டில் தான் இருந்தேன். எனது அம்மாச்சி வீட்டில் இருந்து சென்று ஐந்து நிமிடத்தில் விபத்து நடந்தது. விபத்து நடந்த பகுதியானது எப்பொழுதும் இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். கார் எந்த திசையில் இருந்து வந்தது என்றால் ஞாபகம் இல்லை. இருசக்கர வாகனம் ஆனது சமுத்திராப்பட்டியில் இருந்து சிறுகுடி செல்லும் பாதையை நோக்கி அந்த வழியாக சென்றது. நான் சத்தம் கேட்ட பிறகுதான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். சாட்சி நாகலட்சுமி மற்றும் பாண்டீஸ்வரி ஆகியோர் எனது அக்கா ஆவார்கள், ராதிகா என்பவர் எனது அக்காவின் மகள் ஆவார்.

4) அவசர ஊர்திக்கு யார் போன் செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் விபத்து நடைபெறவில்லை என்றாலும் இறந்து போன எனது அம்மாச்சிக்கு காப்பீடு பெறுவதற்காக அம்மாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயம் அருகில் இருந்தவர்கள் கூடிவிட்டார்கள் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் யார் அங்கு இருந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்ட சொல்ல இயலாது என்றால் சரிதான். விபத்து நடந்ததற்கு பிறகு எதிரி அங்கு இருந்தாரா அல்லது ஓடிவிட்டாரா என்ற விபரத்தை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் எதிரி சம்பவ இடத்தில் தான் இருந்தார்.

5) இருசக்கர வாகனத்தை எதிரி எடுத்து சென்று விட்டாரா, இருசக்கர வாகனத்திற்கு சேதாரம் ஏதும் ஏற்பட்டதா என்ற விபரங்கள் தெரியாது என்றால் சரிதான். விபத்தானது கார் மோதி ஏற்பட்டதா அல்லது இருசக்கர வாகனம் மோதி ஏற்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல இரு சக்கர

**வாகனம் மோதி தான் விபத்து ஏற்பட்டது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.27 14:27:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CC.No. | 125/2024 | LW- | 4 | PW- | 3 |

| | |
|---|---|
| Name | : ராதிகா (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : அழகு உத்தமராஜா |
| Village | : சமுத்திராப்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 16/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of October 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

கேள்வி: சம்பவ சமயம் எனக்கு எத்தனை வயது என்றால்?

பதில்: 15 வயது.

கேள்வி: தற்போது நீங்கள் என்ன படிக்கிறீர்கள் என்றால்?

பதில்: 12 ம் வகுப்பு படித்து வருகிறேன்.

கேள்வி : நான் தற்போது எங்கு வந்துள்ளேன் என்று தெரியுமா என்றால் ?

பதில்: தெரியும், நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன்.

கேள்வி: சத்தியமாக சொல்வது என்றால் என்ன?

பதில்: உண்மையை பேசுவது.

சாட்சி கேள்விகளை புரிந்து கொண்டு பதில் சொல்வதால், அவரது சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து 12ம் வகுப்பு படித்து வருகிறேன். அ.சா.1 என் அம்மாச்சி. வழக்கில் இறந்துபோன சின்னப்பொட்டு என் பாட்டியாவார். ஆஜர் எதிரி கௌதம் என்பவரை நான் பார்த்திருக்கிறேன். கடந்த

06.08.2024 ம் தேதி மாலை சுமார் 7.00 மணியளவில் எங்கள் வீட்டின் முன்பாக பாலத்தின் அருகே என் பாட்டி கடைக்கு சென்றுவிட்டு நடந்து வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தில் அதிக வேகமாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தவர் என் பாட்டி சாலையை கடக்க முயன்றபோது வேகமாக வந்து மோதி விபத்து ஏற்படுத்தினார். அதில் என் பாட்டிக்கு நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்டும், இடது கால் உடைந்தும் இருந்தது. பின்னர் 108 அவசர ஊர்தியில் என் பாட்டியை நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கே என் பாட்டி 07.08.2024 ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அவரது உடலை 08.08.2024 ம் தேதி போஸ்ட்மார்டம் செய்து கொடுத்தார்கள். ஆஜர் எதிரியின் இருசக்கர வாகனத்தின் பதிவு எண். 7057 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) சின்ன பொட்டு எத்தனை மணிக்கு வீட்டிலிருந்து கடைக்கு சென்றார் என்றால் ஏழு மணி இருக்கும். இந்த விபரத்தை போலீசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் இல்லை. விபத்தானது ஏழு மணிக்கு நடந்தது. 8.45 மணிக்கு விபத்து நடந்ததாக சொல்லி இருந்தால் அது தவறானது என்றால் சரிதான். கடையானது வீட்டில் இருந்து சிறிது தூரத்தில் தான் உள்ளது. ஐந்து அல்லது மூன்று நிமிடத்தில் சென்று வந்துவிடலாம். கடைக்கு எதற்காக சென்றார் என்றால் அவரது செல்ஃபோன் கடையில் சார்ஜ் போட்டிருந்ததால் அதை எடுக்க சென்றிருந்தார். சம்பவம் நடந்த இடம் ஆனது வீட்டில் இருந்து சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்த இடமானது இருட்டாக இருக்கும் என்றால் சரிதான்.

3) சம்பவம் நடந்த சமயம் நானும், கோகிலா என்பவரும் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தோம். 100 மீட்டர் என்பது எவ்வளவு அடி தூரம் இருக்கும் என்றால் எனக்கு மீட்டர் மற்றும் அடி கணக்கு தெரியவில்லை. அந்த தூரத்தில் இருந்து பார்த்தால் நடந்த சம்பவத்தை பார்க்க இயலாது என்னால் சரியல்ல பார்க்கும் தூரத்தில் தான் நாங்கள் இருந்தோம். சத்தம் கேட்டு தான் சென்றோம் என்றால் சரிதான். நாங்க சென்று பார்த்தபோது எனது பாட்டி கீழே கிடந்தார் எதிரியும் அவரது இருசக்கர வாகனத்துடன் கீழே விழுந்து கிடந்தார். போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் இறந்ததற்கு மறுநாள் வந்து விசாரித்தார்கள். எதிரி கீழே விழுந்து கிடந்தார் என்ற விபரத்தை போலீசார் விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) விபத்து நடந்ததற்கு பிறகு எதிரி அங்க நின்று கொண்டிருந்தாரா அல்லது ஓடிவிட்டாரா என்ற விபரத்தையும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் கேட்காததால் சொல்லவில்லை. விபத்து நடந்த சமயம் மழை பெய்து கொண்டிருந்ததாக நான் சொல்லும் நிலையில் அதை போலீசார் விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் சரிதான். கனமழையா அல்லது மிதமான மழையா என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் சாதாரண மழை பெய்தது. நாங்கள் குடை பிடித்துக் கொண்டிருந்தோமா என்றால் இல்லை வெளியே இருந்த பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தோம்.

5) நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் புகார் தரார் எனது அம்மாச்சி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றார் சரியல்ல. விபத்து நடந்த போது பக்கத்தில் இருந்தவர்கள்

**வந்தார்கள்.யார் யார் வந்தார்கள் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் இறந்து போன நபருக்கு இழப்பீடு பெறுவதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியில்லை.**

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.27 14:27:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.125/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 125/2024 LW- 6 PW- 4

| | |
|---|---|
| Name | : பூபதி (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : அய்யாவு |
| Village | : சமுத்திராப்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 42/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of October 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து சலவை தொழில் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். சுமார் 3 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் எங்கள் வீட்டின் முன்பாக போலீசார் வந்து விபத்தில் இறந்துபோன சின்னப்பொட்டு என்பவருக்கு ஏற்பட்ட விபத்து பற்றி விசாரித்தார்கள். பின்னர் சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன். (**பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டில் வைத்து தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான், சாலை ஓரத்தில் தான் எனது வீடு உள்ளது.

**என்னுடன் வேறு யார் கையொப்பம் செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டிற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும். என்னிடம் எந்த விபரமும் சொல்லாமல் தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.**

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.27 14:27:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.125/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 125/2024 LW- 7 PW- 5

| | |
|---|---|
| Name | : போஸ் (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : அடைக்கன் |
| Village | : சமுத்திராப்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 52/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of October 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கனரக வாகன ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். சுமார் 1–1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் எங்கள் வீட்டின் முன்பாக உள்ள சாலையில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு அளந்து கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் முதல் நாள் இரவு விபத்து ஏற்பட்டு ஒரு வயதான அம்மா இறந்துவிட்டதாக விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது இருசக்கர வாகனம் மோதிய விபத்து குறித்து கேள்விப்பட்டதாக சொன்னேன். பின்னர் சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நானும், மற்றொரு நபரும் கையொப்பம் செய்தோம். (**பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. எந்த அதிகாரி கையொப்பம் வாங்கினார் என்று தெரியுமா என்றால் நத்தம் காவல் நிலைய S.I. வாங்கினார், அவர் பெயர் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து எனது வீடு சுமார் 110 அடி தூரத்தில் உள்ளது. என்னுடன் யார் கையெழுத்து செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.27 14:27:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்